உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# எழுக எம்தமிழ்க் குடியே!

இல.பிரகாசம்
ஆத்துார், சேலம்.

எழுக எம்தமிழ்க் குடியே!
என்னருந் தமிழுக்கு யானென்
எதுசெய்ய என்றே எழுக!

காலம் தோறும் ஓயாது
தொண்டு செய்திடும் உளத்தால்
தமிழுக்குப் பணிசெய்ய வருக!

எப்பணிக்கும் உயர்பணி யாம்எம்
தாய்த்தமிழ் மொழிக்கு உழைப்பது
யாம்பெற்ற பெறும்பே றென்று!

எவர்பேசும் மொழிக்கும் உன்னருந்
தாய்த்தமிழ் ஒருபோதும் தாழ்வில்லை
உயர்தனிச் செம்மொழி போற்று!

பழமை விலங்கிட்ட மரபினை
பிழையென எண்ணி உணர்ந்து
புறந்தள்ளி உயர்வை நோக்கு!

உயர்வான எண்ணம் கொண்ட
குறள்நெறி நின்று அறமே
சிறந்ததென நெஞ்சில் போற்று!

ஒப்புயர் வானசெம் மொழிதனக்கு
நற்பணி யாற்றிட இன்றே
ஒன்றி இணைந்து வருக!

(((((()))))